[டாக்டர் மு. கருணாநிதி] [1975 நவம்பர் 12

"பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட வேண்டும்"
என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது ஒரு மோஷன் மாதிரிதான். This is a resolution. Before tha t is put to vote, நெக்ஸ்ட் டைம் டிசம்பரிலா அல்லது எப்பொழுது கூட்டுவதாக இருக்கிறது? அதுசம்பந்தமாக அரசாங்கத்தின் கருத்து என்ன? ஒரு குழப்பம் ஏற்பட்டு அதனால் இந்த ரெசல்யூஷன் முறை வந்தது. அந்த விவரத்தைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். மீண்டும் கூட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? முதலமைச்சருக்கு அது பற்றித் தெரிந்தால், அதைச் சொன்னால் அதற்கேற்றபடி இந்த மோஷனுக்கு ஓட்டு போடலாமா வேண்டாமா என்பதைப் பற்றி தீர்மானிக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப்பற்றிய விவரம் சொல்லலாம் என்றுதான் நேற்று வானொலியில் ஆவலோடு எதிர்பார்த்தேன். எதுவுமே கிடைக்கவில்லை.

2. தகவல் கோரல்.

(ஆ) ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எவருக்கும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்து

THIRU K. T. K TANGAMANI : Because today is the last day, some information is being spread in the lobby that one of the I.A.S. Officers has been compulsorily retired. This is the first time in Tamil Nadu that an I.A.S. Officer is being retired. I want to know whether there is any truth in that rumour.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெயரைச் சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி: நம்பியார் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ரிடையர் செய்யப்பட்டிருக்கிறார் என்று லாபியில் பேசப்படுகிறது, அது உண்மையா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்னும் வேறு எதாவது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ரிடையர் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இதோடு சேர்த்து. இந்த ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி மட்டும்தானா? வேறு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்மீதும் கை வைப்பதற்கு முடிவு செய்திருக்கிறதா என்பதை விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

1975 நவம்பர் 12]

திருமதி த. ந. அனந்தநாயகி: வானொலியில் எதிர்பார்த்தேன் என்று சொல்கிறீரே. எதற்காக வானொலியை எதிர்பார்க்க வேண்டும்? ஜனவரியில் சட்டசபையைக் கூட்டுகிறீர்களா, கவர்னர்ஸ் அட்ரஸ் இருக்கிறதா என்பதற்காகக் கேட்கிறார்கள். ஐந்து வருஷம் முடிகிறது பிப்ரவரியோடு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வானொலியில் பிரதமர் பேசுகிறார் என்று நேற்று காலையிலிருந்தே பலமுறை, ஏழெட்டு தடவைகள் சொன்னார்கள். ஏதோ புதிய விஷயங்கள் வரும் என்று எதிர்பார்த்தேன். தேர்தல் பற்றி இருக்கும் என்று எதிர் பார்த்தேன். ஆனால் விஷயம் கிடைக்கவில்லை. எனவே, அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்டது உண்மைதான், அவர்கள் கேட்ட கேள்வி, தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பியது, உண்மை தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் கேட்ட விஷயம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை பேர் என்று கேட்டார்கள். பொதுவாக மத்திய அரசு எடுத்திருக்கின்ற முடிவுகளின்படி, நம்முடைய மாநில அரசு அதிகாரிகள், இங்கேயுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். அதிகாரிகள் இதற்கென்று இருக்கின்ற குழுக்கள் பரிசீலித்து மாநில அரசு எடுக்க வேண்டிய முடிவுகளை எடுக்கிறோம். மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவுகளுக்குப் பரிந்துரைகள் செய்கிறார்கள். அவர்கள் பரிசீலித்து ஒப்புதல் வழங்குகிறார்கள்.

(7) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட வேண்டும்."

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு **நிறைவேற்றப் பட்டது.***